மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசு இந்த விதியைத் தளர்த்த விரும்பவில்லை. 2, 3 தவணைகளில் சட்டலாம் என்று வைத்தால், ஒரு தவணை கட்டியதோடு நின்று விடுகிறார்கள். மற்ற தவணைகளுக்கு அவர்களைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தால் ரூ. 10,000யும் ஒரே தவணையில் கட்ட வேண்டுமென்று அரசு கூறுகிறது. அவ்வூரில் பள்ளி வேண்டுமென்கிற 10,000 பேர் ஒன்று சேர்ந்து ஆளுக்கு ரூ. 1 தந்தாலும்கூட, ரூ. 10,000 சேர்ந்துவிடும், உயர்நிலைப்பள்ளி வந்துவிடும். ஆனால், ரூ. 10,000 கட்டிவிடுவதாலேயே உயர்நிலைப்பள்ளி வந்துவிடாது. அவர்கள் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளிலே இந்த ரூ 10,000 கட்ட வேண்டுமென்ற நிபந்தனையும் ஒன்று. ஆளுக்கு ரூ. 1 கொடுத்தால் கூட, சிறுதுளி பெருவெள்ளம் என்ற அளவில் நிதியைத் திரட்டிக் கொடுப்பதற்கு வழி ஏற்படும்.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே இராமநாதபுரம் மாவட்டத்திலே பெண்கள் கல்வி முற்போக்காக இல்லை. அதிலும் இந்த திருப்புவனம் பகுதியிலே இந்தப் பள்ளிக்காக ரூ. 10,000 கட்டியிருக்கிறார்கள். ஆகவே, மற்ற நிலைமைகளை ஆராயாமல் இந்த ரூ. 10,000 கட்டியதனால், அங்கு உடனடியாகப் பெண்கள் பள்ளியை ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே மற்ற நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றவேண்டும். மற்ற நிபந்தனைகளை தளர்த்தி, அனுமதி தந்தால், அனுமதி தந்ததற்குப்பிறகு ஏற்படும் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு வழிவகை இல்லை. பிறகு அந்தச் சங்கடங்களைத் தீர்ப்பதற்கு வழி தேடி, வழி இல்லாமல் போய்விடும். ஆகவேதான் இப்பொழுதே நிறைவேற்றவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டு அவர்கள் நிறைவேற்றுவார்களானால் அதுபற்றி கவனிக்கப்படும்.

பென்னலூர்பேட்டை அரிசனங்களுக்குக் குடியிருப்பு மனைகள்.

* 475. வினா திரு. க. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (ஆ) பென்னலூர் பேட்டைத் துணை வட்டம், ஆலப்பாக்கம், அன்னதரன காக்கவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் அளிக்கும் திட்டம் நிறைவேற்றப் படுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

ஆலப்பாக்கம்:

மேற்குறித்த அரிசன காலனியில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான குறிப்பேதும் தற்பொழுது இல்லை.

1974 மார்ச் 18]

அன்னதான ராக்கவாக்கம் :

அரிசன காலனியில் போதுமான நிலமிருப்பதால் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமில்லை. வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஒரு வேளை இந்தக் கேள்வி கேட்கப்பட்ட நேரத்திலே அந்தக் குறிப்பு இல்லாமல் இருந்திருக்கலாம். பின்னாலே மாவட்ட ஆட்சித் தலைவர் தனித் தாசில்தார் (அரிசன நலம்) மூலமாக அந்தக் கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, மேற்கண்ட இந்த இரண்டு அரிசனக் காலனிகளுக்கும் மனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான தனி உத்திரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆலப்பாக்கம் கிராமத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல தனித் தாசில்தார் அவர்களுக்கு அனுப்பிவைத்து செயற்குறிப்பை அனுப்பலாம். ஆனால் அன்னதான காக்கவாக்கத்தைப் பொறுத்தவரையில் விரைவிலே பட்டா வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். எனவே காலதாமதம் ஏற்படாது என்று கருதுகிறேன்.

* 476—வினு திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னலூர்ப்பேட்டைத் துணை வட்டம், அழிஞ்சிவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்து வழங்கும் திட்டம் அமுல் படுத்தப்படுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணம் என்ன ?

(இ) இத்திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) பென்னலூர்ப் பேட்டை துணை வட்டத்திலிருக்கும் அழிஞ்சிவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப் படுத்தும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டாட்சியர் அரிசன நல தனித் தாசில்தாரைப் பணித்துள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அழிஞ்சிவாக்கம் அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுவதற்காக கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டும்கூட நிலத்திற்குச் சொந்தக்காரர் உயர்நீதிமன்றத்திற்கு ரிட் மனுப் போட்டு தடைப்படுத்தி வருகிருர்கள். இம்மாதிரி வழக்குகளில் எக்ஸ்பெடைட் பெட்டிஷன் தாக்கல் செய்து இதை வேகமாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதற்காகத்தான் சட்ட இலாகா மூலமாக இதைப் போலுள்ள பல வழக்குகளை வேகமாகச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.